1986 மே 3]

ராக்காயி அம்மன் கோயில் கும்பாபிஷேகம்.

610—(*வினா எண் 6901) திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், அழகர்கோவிலுள்ள ராக்காயி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் செய்ய அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அருள்மிகு ராக்காயி அம்மன் திருக்கோயில், அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் நிர்வாகத்திற்குட்பட்ட ஒரு துணைக்கோயிலாகும். அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் கும்பாபிஷேக ஏற்பாடுகள் செய்யும்போது அருள்மிகு ராக்காயி அம்மன் திருக்கோயிலுக்கும் கும்பாபிஷேகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

கோவையில் புதிய சிமிண்ட் ஆலை.

611—(* வினா எண் 2082) திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வட்டத்தில் புதிய சிமிண்ட் ஆலை ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் சிறு சிமெண்ட் ஆலை அமைக்க இரண்டு தனியார் நிறுவனங்கள், இந்திய அரசின் தொழில் நுட்பவியல் வளர்ச்சி தலைமை இயக்குநரின் பதிவு ஒப்புதல் பெற்றுள்ளன.

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை ஜில்லாவிலே சிறிய 2 சிமெண்டு தொழிற்சாலைகள் தனியார்கள் ஆரம்பிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்? எவ்வளவு மூலதனத்தில் அது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் எட்டிமடையில் சிறிய சிமெண்டு ஆலை நிறுவ தகிராபானு, கோவை, திருவாளர் ஸ்டீல் ராக் சிமெண்டு நிறுவனம், திருப்பூர், திருவாளர் வெல்கோ சிமெண்டு நிறுவனம், கோவை ஆகிய 3 தனியார் நிறுவனங்களுக்கு பதிவு ஒப்புதல் வழங்க இந்திய அரசின் தொழில் நுட்ப இயல் வளர்ச்சி தலைமை இயக்குநர் அவர்கள் மாநில அரசுக்கு பரிந்துரை செய்ததில் திருவாளர் ஸ்டீல் ராக், வெல்கோ நிறுவனங்களுக்கு D. G. S. & D. Registration வழங்கப்பட்டு இருக்கிறது. இதில் ஸ்டீல் ராக் நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு 60 ஆயிரம் டன் உற்பத்தி திறன் கொண்ட சிறிய ஆலை ஒன்று அமைக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

(முற்பகல் 9-20)

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் ஏற்கெனவே ஏ.சி.சி. சிமெண்ட் நிறுவனம ஒன்று தற்போது அமைச்சர் குறிப்பிட்ட அதே பகுதியில் மதுக்கரைப் பகுதியில் அமைந்திருக்கிறது. கேரள மாநிலத்தில் இதை யொட்டி ஒரு சிமெண்ட் ஆலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஏ.சி.சி. சிமெண்டிற்குப் போதுமான ராமெட்டீரியல்ஸ், லைம் ஸ்டோன் போன்றவைகள் கிடைப்பதற்கு அரியதாகிவிடும் என்ற கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது உண்மைதானா என்பதையும், இருந்தாலும் பெரிய ஆலை வருவது என்பது வரவேற்கத் தக்க ஒன்று என்ற வகையில், அந்தக் கவலையைப் போக்குகின்ற வகையில், ஆலைக்கான ராமெட்டீரியல்ஸ் கிடைக்கிறது என்ற உறுதியை மாநில அரசு மத்திய அரசிற்குத் தெரிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது கோவையிலே நடைபெற்று வருகிற ஏ.சி.சி. சிமெண்ட் ஆலையிலேயிருந்து அப்படிப்பட்ட குறைபாடுகள் எதுவும் வரவில்லை. இன்றைக்கு இந்தச் சிறு சிமெண்ட் ஆலையில் 241.75 எக்கர் பரப்பளவில் 6 ஆண்டுக் காலத்திற்கு சுரங்கக் குத்தகை, சுண்ணாம்புக் கல் எடுப்பதற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

1986 மே 3]

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலமாக மதுரையில் ஒரு சிமெண்ட் ஆலையை ஆரம்பிக்கும் ஒரு ப்ரபோசல் இருக்கிறதே, அது எந் நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நான் இதை மானியக் கோரிக்கையிலே எடுத்துச் சொன்னேன். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரவ நைட்ரஜன் தொழிற்சாலை.

612 — (* வினா எண் 5009-ஏ) திரு. க. வெ. வீரானம்பலம்: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் திரவ நைட்ரஜன் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இல்லை.

டை ஆக்ஸைடு தொழிற்சாலை.

613—(* வினா எண் 5533) திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், குமரி மாவட்டத்தில் உள்ள கடலோரப் பகுதிகளில் கிடைக்கும் இலுமினெட்டில் இருந்து டை ஆக்ஸைடு (Titanium Di-oxide) தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், துவக்கப் பணிகள் எப்போது துவங்கப் பெறும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.